CC-O. In Public Domain. Digitized by eGangotri

கதை மலர்





2

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிறுவர் பகுதி

விருந்தாளியின் கடமை

கதை:
மாது
படம்:
சங்கர்...

பாண்டவர்களைக் கந்கிரமாக ஒழித்துக் கட்ட துரியோதனன் ஒரு சதி செய்தான். அதன் விளைவாகக் கட்டப்பட்டது ஓர் அரக்கு மாளிகை.



வா! வா! வா! இந்த அரக்கு மாளிகையில் பாண்டவர்களைக் குடியேற வைப்பேன். அத்துடன் முடிந்தது அவர்களின் கதை.

ஆனால் துரியோதனின் சதி விதுரரின் உதவியால் பீமனுக்குத் தெரிந்து விட்டது. மாளிகைக்குத் துரியோதனன் நெருப்பு வைத்ததும் ரகசிய வழியில் சகோதரர்களையும் தாய் குந்திதேவியையும் அழைத்துச் சென்று பீமன் காப்பாற்றிவிட்டான்.



Published by
© The President
Sri Ramakrishna Math
Mylapore, Madras 600 004

All Rights Reserved

First Impression
I-5M-3C-6-88
ISBN 81-7120-097-4

Printed in India at
Sri Ramakrishna Math Printing Press
Mylapore, Madras 600 004

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அரக்கு மாளிகையிலிருந்து தப்பிய பாண்டவர்கள் ஏகசக்ரா என்ற நகரத்தை அடைந்தனர். அங்கே அவர்கள் தாங்கள் யார் என்பதைக் காட்டிக்கொள்ளாமல் வாழ முடிவு செய்தனர்.
ஓர் ஏழை அந்தணர் அவர்களுக்கு இருப்பிடம் தந்து உதவி செய்தார்.

ஐயோ பாவம், வெளியூர்க்காரர்களா? என் வீட்டிலேயே நீங்கள் தங்கியிருக்கலாம். உங்களுக்கு உதவுவதால் நான் குறைந்து போய்விட மாட்டேன்.

ஒரு நாள் யுதிஷ்டிரரும் மற்றச் சகோதரர்களும் வழக்கம்-போல் நகருக்குள் பிக்ஷை வாங்கி-வரச் சென்றிருந்தனர். பீமனும் குந்திதேவியும் மட்டும் வீட்டில் இருந்தனர். அப்போது...

அம்மா! யாரோ அழுவது போலில்லை?

வா, போய்ப் பார்ப்போம்.

புறக்கடையில் கவலையே உருவாக வீட்டுக்கார அந்தணரும் அவரது மனைவியும் அழுது கொண்-டிருந்தனர். கிடுக்கிட்டனர் பீமனும் குந்தியும்.

அந்தணனின் மனைவி விவரித்தாள்...

என்ன விஷயம் தாயே? உங்களுடைய துக்கம் என்னவென்று நாங்கள் அறியலாமா?

இந்த நகரைப் பிடித்த துரதிர்ஷ்டக் கதையை என்னவென்று நான் சொல்வேன்!

பகாசுரன் என்ற ஓர் அசுரன் அருகிலுள்ள மலையிலிருந்து நினைத்தபோது நகருக்கு வந்து கைக்குக் கிடைத்தவர்களையெல்லாம் கொன்று தின்று அட்டூழியம் செய்து கொண்டிருந்தான்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

எனவே நகரமக்கள் பகாசுரனிடம் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

பகாசுரா, உன் வயிறுக்கு வேண்டியது தினிதானே? ஏன் ஏராளமானபேரைக் கொல்கிறாய்? நாங்கள் ஒவ்வொரு வீட்டாரும் முறை வைத்துக்கொண்டு தினமும் உன் இருப்பிடத்திற்கு நீ தின்பதற்கு ஓர் ஆளையும் ஒரு வண்டி உணவையும் அனுப்பி வைக்கிறோம்.

ஹ...ஹ...ஹ... ஒப்பந்தத்தை மீறினால் மறுபடியும் வந்து ஊரிலுள்ள அத்தனை பேரையும் கொன்று விடுவேன்...

அந்தணன் மனைவி சோகத்துடன் பீமனிடம் சொன்னாள்.

இன்று பகாசுரனின் உணவுக்கு எங்கள் வீட்டிலிருந்து ஒருவர் செல்ல வேண்டும். அதுதான் அழுகிறேன். எங்களுக்கு இருப்பதோ ஒரே ஒரு மகன். என் கணவரோ வயதானவர். நான் சென்று பகாசுரனுக்கு இரையாகலாமென்றாலோ, அவன் பெண்களைத் தின்னமாட்டான்.

குந்திதேவிக்கு இரக்கமேற்பட்டது.

தாயே! உங்கள் வீட்டிலிருந்து ஒருவன் போகவேண்டும். அவ்வளவுதானே? உங்கள் மகனுக்குப் பதில் இதோ என் மகன் பீமனைப் பகாசுரனுக்கு உணவாக இன்று அனுப்பி வைக்கிறேன்.

குந்தியின் யோசனைக்கு அந்தணர் சம்மதிக்கவில்லை.

என் வீட்டுக்கு விருந்தாளியாக வந்தவர்கள் நீங்கள். எங்களுக்காக உங்கள் மகனை நீங்கள் இழக்கச் சம்மதிக்கவே மாட்டோம். நான் வயதானவன். பழுத்த தளிர்ந்து கிழிந்து அழிவது போல் என் உடல் இன்னும் சில நாளில் தானாகவே போகத்தான் போகிறது. அதற்கு முன் நானே பகாசுரனுக்குப் பலியாகிறேன்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

குந்தி ஆறுதல் சொன்னாள்.

எங்களை விருந்தாளிகளாக மதித்து அன்புடன் இடம் கொடுத்திருக்கிறீர்கள். வீட்டுச் சொந்தக்காரருக்கு ஒரு துன்பம் வந்தால் அதிலிருந்து அவரை மீட்பது விருந்தாளிகளின் கடமையல்லவா? என் மகன் பீமனின் பலத்தைப்பற்றி உங்களுக்குத் தெரியாது. இவன் பகாசுரனையே கொன்றுவிடக் கூடியவன். அப்படியே இவன் இறந்தாலும் கூட, எனக்கு மேலும் நான்கு பிள்ளைகள் இருப்பார்கள்.

அந்தணர் கடைசியில் சம்மதித்தார். பீமன் வண்டி நிறையச் சோறுடன் பகாசுரனைச் சந்திக்கச் சென்றான்.

வந்த இடத்தில் எனக்கு இப்படி ஒரு சவாலா? சபாஷ்!

பீமனுக்கும் பகாசுரனுக்கும் பயங்கர யுத்தம் நடந்தது. இறுதியில் பகாசுரன் இறந்தான்.

பகாசுரனைக் கொன்று வெற்றியுடன் திரும்பிய பீமனையும், அவனை அனுப்பிவைத்த தாய் குந்தியையும் மக்கள் புகழ்ந்தனர்.

இருக்க இடம் கொடுத்து உபசரித்தவர்களின் உயிரைக் காப்பாற்றத் தன் மகனைப் பலி கொடுக்கத் துணிந்த இந்தத் தாயின் கருணையே கருணை!!!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

தேவ கானம்

கதை : ஜஜ படம் ; சங்கர்...

டில்லி பாதுஷா அக்பர் சக்கரவர்த்தியின் அரண்மனைப் பாடகனைப் பெரும் புகழ் பெற்றவன் தான்சேன். அற்புதமான பாடகன். சங்கீததேவதையின் அருளையும் குருவின் அருளையும் பரிபூர்ணமாகப் பெற்றவன்.

ஒரு நாள் அக்பர் சக்கரவர்த்திக்கு முன்னால் தான்சேன் கானமழை பொழிந்துகொண்டிருந்தான். அக்பர் மெய்ம்மறந்து போனார்.

தான்சேன்! உன்னை இசையிலே மிஞ்சக்கூடியவன் உலகில் எவனுமே இருக்க மாட்டான்! ஆகா! என்ன அற்புதமான பாட்டு!

இல்லை, பாதுஷா அவர்களே! என்னை மிஞ்சக் கூடியவர் ஒருவர் இருக்கிறார்!

அப்படியா? யார் அவர்? எங்கே இருக்கிறார் அவர்?

அவர் சாமானியரல்ல. பெரிய மகான்! அவரே என் குருமகராஜ-ஹரிதாஸ் சுவாமிகள்! பிருந்தாவனத்தில் நிதுவனம் என்ற இடத்தில் இருக்கிறார்.

சபையில் இருந்த ஒரு மந்திரி எழுந்தார்.

உங்களையும் மிஞ்சிப் பாடக்கூடியவர் என்றால் அவரை இங்கே அழைத்து-வரச் சொல்லலாமே!

அவர் பிருந்தாவனத்தைவிட்டு எங்கும் வருவதில்லை. பல மன்னர்கள் முயன்று பார்த்து விட்டார்கள்!

பல கலைகளையும் அநுபவிப்பதில் தேர்ந்த அக்பர் சக்கரவர்த்தி ஆவலை அடக்கமாட்டாமல் யோசனையில் ஆழ்ந்தார்.

சக்கரவர்த்தி அவர்கள் நினைத்தால் அவரை அழைத்து வரவா முடியாது?

பெரிய மகான்கள் விஷயத்தில் நாம் நினைத்தபடி குறுக்கிடலாகாது. ஆனால் தான்சேன், அவர் பாட்டைக் கேட்க என்னதான் வழி?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain.Digitized by eGangotri

ஒரே வழிதான் இருக்கிறது. பாதுஷா அவர்கள் என் சிஷ்யன்போல் மாறுவேஷம் போட்டுக்கொண்டு வந்தால் கேட்கலாம்!

அவ்வளவுதானே! அப்படியே போவோம்! பெரிய மகான் என்றுல் ஈசுமே அவரைக் கேடிப்போவதுதான் சிறந்தது.

அவ்வாறே மாறுவேடம் அணிந்து பாதுஷா தான்சேனுடன் பிருந்தாவனத்துக்குச் சென்றார்.

குரு மகராஜ்! வணங்குகிறோம்!

நெடுங்காலம் சுகமே வாழ்வீர்களாக!

நந்தவனத்தில் மாலை வரையில் மாறுவேஷம் போட்ட சிஷ்யனுடன் பொழுதைப் போக்கிவிட்டு, குருவுக்கு முன்னால் சென்று அமர்ந்து பாட ஆரம்பித்த தான்சேன், நடுவில் வேண்டுமென்றே தப்பாகப் பாடினான்.

தான்சேன்! நடுவில் தப்பாகப் பாடுகிறாய்! இப்படிப் பாடு!

குருதேவர் தம் பாட்டில் தாமே லயித்துப்போய், மெய்ம்மறந்து பாடிக்கொண்டே போகிறார். பாதுஷா பிரமித்துப்போய் உட்கார்ந்து விடுகிறார்.

பாட்டா இது! தேவகானம்! ஆகா!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பாடிக்கொண்டே போன குருதேவர் கிருஷ்ணப்பிரேமையில் லயித்து, தியான நிலையில் மூர்ச்சையாகி விழுந்து விடுகிறார்.

பாதுஷா அவர்களே! என்ன, அப்படிச் சமைந்துபோய் விட்டீர்களே!

தான்சேன்! இப்படிப்பட்ட குருவைப் பெற்ற நீ பாக்கியசாலி. இது என்ன கானம்! கல்லும் கரைந்து உருகும் தெய்வீக இனிமை. உயிரையே உலுக்குகிற இந்தத் தெய்வீக சக்தி இவர் பாட்டுக்கு எப்படி வந்தது?

தான்சேன் குருதேவருக்கு விசிறி, அவரை ஆசுவாசப்படுத்துகிறான்.

பெருமை மிக்க சக்கரவர்த்தி அவர்களே! இது தெரியவில்லையா? குரு மகராஜ் எண்ணப்போல சக்கரவர்த்திகளுக்காகப் பாடுவதில்லையே, சர்வேசுவரனுக்கு அர்ப்பணமாக அல்லவா பாடுகிறார்? அமிர்த தாரையாகப் பொழிவதற்குக் கேட்பானேன்?

ஆமாம் தான்சேன். அதுதான் உண்மை! ஆண்டவன் ஒருவனைத் தவிர, வேறு யாருக்காகவும் இவர் பாடாதகாலத்தான் இது தேவகானமாக இருக்கிறது!

குரு மகராஜ்கி ஜய்!

ராதாஷ்டமியன்று அவதரித்த பக்த ஹரிதாஸரின் இன்னிசைப் பாடல்கள் பிருந்தாவனம் எங்கும் அன்று எதிரொலித்தன. இன்று அந்தத் தேவகானம் பாரத நாடு முழுவதுமே எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

சமாதி நிலை கலைந்து, ஹரிதாஸர் கண்விழித்து எழுந்து அமருகிறார்.

குரு மகராஜ்! மன்னித்தருள வேண்டும்! இவர் என் சிஷ்யன் போல மாறு வேஷத்தில் வந்தாலும் இந்துஸ்தானத்தின் பாதுஷா. இந்தத் தெய்வீக கானத்தைப் பருகும் ஆவலில் இப்படி வர நேர்ந்தது. எங்களை ஆசீர்வதித்தருள வேண்டும்!

நான்தான் வந்ததுமே வாழ்த்திவிட்டேனே. எல்லாம் இறைவனின் விளையாட்டு! எல்லாருடைய இதயங்களிலும் அவனே உறைகிறான். அவனே இசையின்பத்தில் கலந்திருக்கிறான். அவன் பெருமை நீடுழி வாழ்க!

அக்பர் சக்கரவர்த்தியும் தான்சேனும் டில்லிக்குத் திரும்புகிறார்கள். 'ஹரிதாஸ் கே ஸ்வாமி சயாம்' என்று கானம் காற்றில் மிதந்து வருகிறது.

தான்சேன்! என் இதயம் அனுபவித்தறியாத இன்பத்தால் நிறைந்திருக்கிறது. ஹரியும் அல்லாவும் வேறு வேறு அல்ல என்ற உண்மை இப்போது எனக்குப் புலனாகிறது! எனது நன்றியை ஏற்றுக்கொள்!

ஹரிதாஸ் கே ஸ்வாமி சயாம்! குரு மகராஜ்கி ஜய!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடவுளுக்கு நிழல் தந்த அழகி

கதை : பரமஹம்சதாஸ்

படம் : சங்கர்...

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு...

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு தமிழகம் முழுவதும் ஆட்சி செய்து வந்த ராஜராஜ சோழச் சக்கரவர்த்தி தஞ்சையில் பெருங்கோயில் எழுப்பிக்-கொண்டிருந்தான்.

மழை, வெயில், ஊண், உறக்கம் பாராமல் நூற்றுக்கணக்கான சிற்பிகள் கோயிற்பணியில் ஈடுபட்டிருந்தனர்.

சிவபெருமானுக்குக் கொண்டு செய்வதில் மன்னருக்குத்தான் எவ்வளவு ஈடுபாடு!

உலகிலேயே இப்படிப்பட்ட கோவிலை எவரும் இனி நிர்மாணிக்க முடியாது.

மாமன்னர் விருப்பம்- கோபுரத்தின் நிழல் தரையில் விழாமல் நிர்மாணிக்க வேண்டுமாம்.

அதே ஊரில் அழகி என்ற ஓர் ஏழைக் கிழவி.

என்ன பாட்டி, கண்ணை மூடிட்டுத் தூங்குறியா பகலிலேயே?

தூங்கலேடா தம்பி, பெருங்-கோவில் கட்டறதுக்கு நாளெல்லாம் எல்லாரும் உழைக்கிறார்கள். எனஞலே என்ன பிரயோஜனம்? கையாலாகாத கிழவி!

சரி, சரி. எனக்குக் கொஞ்சம் தாகத்துக்கு மோர் தாயேன். வெயிலிலே நாக்கு வறளுது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மோர் கொடுத்த அழகிப் பாட்டியின் மனதில் பளிச்சென்று ஓர் எண்ணம்- அவள் முகம் மலர்கிறது.

கோவிலில் வேலை செய்யும் சிற்பிகளுக்கு மோர் கொடுப்பதையே ஒரு சிவ கைங்கர்யமாகச் செய்தால் என்ன?

மறு நாள் முதல் தான் நினைத்தது போலவே சிற்பிகளுக்கு அழகிப்பாட்டி நீர்மோர் கொடுத்தாள்.

பாட்டி, நீ நல்லா இருக்கணும். தினமும் மணக்க மணக்க வெயில் வேளையில் எங்களுக்கெல்லாம் நீர்மோர் கொண்டுவந்து தருகிறாய்.

வாங்கிக் குடிப்பா கம்பி. கோவில் வேலை செய்யறே.

கோவில் வேலைகள் பூர்த்தியாகும் நேரம். கோபுர விதானத்தில் கருவறைக்கு மேல் கல் பதிக்கும் வேலைதான் பாக்கி. தகுந்த கல்லாகத் தேடிக்-கொண்டிருந்தார் தலைமைச் சிற்பி. அழகிப் பாட்டியின் முகத்தில் கவலை ரேகை.

என்ன பாட்டி, சோர்ந்துட்டே? கோவில் வேலை முடிந்ததும் நாங்க-ளெல்லாம் போய்விடுவோமே, நீர்மோர் யாருக்கும் தரமுடியாதேன்னு கவலைப்படறியா?

அதைவிடப் பெரிய கவலை. ஆண்டவன் கோவிலுக்கு இந்த ஏழையால் ஒரு சின்னக் காணிக்கைக்கூடத் தரமுடியலையே!

சக்கரவர்த்தி கட்டும் கோவிலுக்குக் காணிக்கை தர நீ என்ன பணக்-காரியா என்ன?

CC-0. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

அழகிப் பாட்டிக்கு ஒரு யோசனை உதித்தது. அவள் குடிசைக்கு முன்னே ஒரு பெரிய கல் நீண்ட நாளாக இருந்தது. ஆனால் தன் ஆசையை வெளிப்படுத்த அவளுக்குக் கூச்சமாயிருந்தது.

சிற்பி அவர்களே, எனக்கு ஓர் ஆசை. நிறைவேற்றி வைப்பீர்களா, சொல்லுங்கள்.

உன் ஆசை என்ன சொல். முடிந்தால் நிறைவேற்றுகிறேன்.

எனக்குச் சொந்தமான குடிசை வாசலில் பல வருஷங்களாக ஒரு பிரம்மாண்டமான கல் இருந்து வருகிறது. அதை நீங்கள் கோபுர விதானத்தில் வைப்பதற்கு உபயோகிக்க முடியுமா?

கலைமைச் சிற்பி கிழவியின் ஆசையை நிறைவேற்றினர். கிழவியின் வீட்டுக்கு ஆட்களை அனுப்பி அந்தக் கல்லை உரிய விதத்தில் செதுக்கி விதானத்தில் பொருத்தி-விட்டார்கள்.

கோவில் வேலை முடிந்து கும்பாபிஷேக நாள் வந்தது. ராஜராஜ சோழச் சக்கரவர்த்தி தான் கட்டிய கோபுரத்தைப் பார்த்து மனம் பூரித்தான்.

சிவபெருமானுக்கு இவ்வளவு அற்புதமான கோபுரத்தை எந்த மன்னனும் இதுவரை கட்டியதில்லை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

அன்றிரவு சக்கரவர்த்திக்கு ஒரு கனவு. கனவில் சிவபெருமான் தோன்றினார்.

மன்ன, பெருங்கோயிலிலே அழகி என்ற கிழவி அமைத்துக் கொடுத்த நிழலில் தங்குவதில் எமக்கு மிகுந்த மகிழ்ச்சி.

கண் விழித்த சக்கரவர்த்தி திடுக்கிட்டார்.

இவ்வளவு பெரிய கோயிலே எம்-பெருமானுக்காக நான் கட்டினேன். ஆனால் இறைவனே அழகி என்ற கிழவி தந்த நிழலில் தங்குவதில் திருப்தி அடைகிறாரோமே! யார் அந்த அழகிக் கிழவி?

மறுநாளே மந்திரிகளை அனுப்பி விசாரித்து அறிந்தவன் அழகிப் பாட்டியைக் காணச் சென்றான்.

மூதாட்டியே! சிவபெருமானுக்குத் தாங்கள் என்ன தொண்டு செய்தீர்களோ எனக்குத் தெரியாது. ஆண்டவன் தாங்கள் தந்த நிழலில் தாம் மகிழ்ச்சியாக இருப்பதாக என் கனவில் கூறினார்.

சக்கரவர்த்தி அவர்களே! இந்த ஏழைக்கிழவி ஒரு தொண்டும் செய்யவில்லை. கோவிற்பணியில் ஈடுபட்டி-ருந்த சிற்பிகளுக்கெல்லாம் வெயில் சமயத்தில் நீர்மோர் கொடுத்தேன். என் வீட்டுமுன் இருந்த கல்லை விதானத்துக்கு உபயோகப்படக் கொடுத்தேன், அவ்வளவுதான்.

சக்கரவர்த்தியின் கைகள் அழகியைத் தொழுதன.

இறைவன் அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை என்பதை நான் புரிந்து கொண்டேன்.

இன்றைக்கும் தஞ்சையில் அழகிக்குளம் என்று ஒரு குளம் இருக்கிறது. அழகிப்பாட்டியின் குடிசை இருந்த மனையில்தான் இன்றைய தஞ்சை நகராட்சி அலுவலகம் உள்ளது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri
CC-0. In Public Domain. Digitized by eGangotri

சந்தன வியாபாரி

கருத்து: பத்மா தேசிகன் கதை: பரமஹம்சதாஸ் படம்: சங்கர்...

அரசர் மகேந்திரன் அமைச்சருடன் நகர்வலம் வந்தார். ஒரு வீட்டுத் திண்ணையில் ஒரு மனிதன் ஏதோ யோசித்தபடி உட்கார்ந்திருந்தான். அரசர் அவனைப் பார்த்தவாறே சென்றார். மறுதினம் அதே நேரம். அந்த மனிதன் முதல் நாள் போலவே சிந்தையிலிருப்பதை அரசர் பார்த்தார்.

அமைச்சரே! அதோ அந்த ஆளைப் பார்த்ததும் அவனுக்கு ஏதாவது தண்டனை தரவேண்டும் என்று தோன்றுகிறது. நேற்றும் இப்படியே தோன்றியது. அவனைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் ஏன் இப்படி என் மனத்தில் தோன்றுகிறது?

அமைச்சர் யோசனையில் ஆழ்ந்தார்...

அரசே! எனக்கு இரண்டு வாரம் அவகாசம் கொடுங்கள். கண்டுபிடித்துச் சொல்கிறேன்!

அமைச்சர் அந்த ஆளைப்பற்றிய விவரங்களை அரசு ஒற்றர் மூலம் சேகரித்தார். அவன் சந்தனக் கட்டைகளை விற்கும் வியாபாரி என அறிந்தார். பிறகு அவர் அரசரிடம் வந்தார்.

அரசே! நம் அரண்மனையில் நிறையக் கட்டில்கள், ஆசனங்கள், அலங்காரக் கதவுகள் முதலானவற்றைச் சந்தன மரத்தில் செய்ய விரும்புகிறேன். நம் நகரக் கோயிலுக்கும் சந்தன மரத்தாலான தேர் ஒன்று செய்ய வேண்டும். தங்கள் அனுமதியைக் கோருகிறேன்.

ஆகா, அதற்கென்ன? தாராளமாகச் செய்யுங்கள். தாங்கள் எதையும் விவேகத்துடன் செய்வீர்கள் என்பதில் எனக்குப் பரிபூரண நம்பிக்கை உண்டு.

Sri Vidyamandir Book Centre, Srirangam

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அமைச்சரின் விருப்பப்படியே புதிய புதிய கட்டிடங்கள், ஆசனங்கள், வாகனங்கள் யாவும் சந்தன மரத்தில் செய்து முடிக்கப்பட்டன. அரண்மனையே சந்தன மணத்தால் நிறைந்தது. ஆலயத்தேரும் அழகாகச் செய்து முடிக்கப்பட்டது.



மாதங்கள் சில சென்றன. அரசர் மீண்டும் அமைச்சருடன் நகர்வலம் வந்தார். முன்பு பார்த்த அந்த மனிதனை அரசர் இப்போதும் பார்த்தார்.

CC-O. In Public Domain. Digitized by eGangotri
© Vidyabharati Book Centre, Sringeri

அரண்மனையை அடைந்து, சந்தனத்தில் உலாவும்போது...



CC-O. In Public Domain. Digitized by eGangotri
Sri Vijayabharathi Book Centre, Sringeri

சஞ்சீவினி விக்கை

கருத்து: சுழுகன் கதை: சீயாம் படம்: சங்கர்...

தேவகுருவான பிருகஸ்பதியின் குமாரன் கசன். அசுரகுருவான சுக்ராசாரியர் குமாரத்தி தேவயானி. இறந்தவர்களைப் பிழைக்க வைக்கும் சஞ்சீவினி வித்தையை அறிந்தவர் அசுரகுரு. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரில் மடிந்த அசுரர்களையெல்லாம் அசுரகுரு பிழைக்கவைத்து, திரும்பத் திரும்பப் போரிடச் செய்து வந்தார். தேவகுருவான பிருகஸ்பதிக்கு அந்த வித்தை தெரியாது. அதனால் தேவர்கள் கவலையடைந்து, கசனை நாடி வந்தார்கள்.

குரு குமாரா! நீ மனம் வைத்தால் தேவர் குலம் தழைக்கும். நீ இளமையோடும் கண்கவர் அழகோடும் திகழ்கிறாய். நீ அசுரகுருவிடம் சிஷ்யனாகச் சேர்ந்து, பணிவிடை புரிந்து, அவருடைய அன்பைப் பெற வேண்டும். அவரிடமிருந்து சஞ்சீவினி வித்தையை எப்படியாவது கற்றுக்கொண்டு வர வேண்டும். செய்வாயா?

தந்தையிடம் ஆசிபெற்றுச் செல்கிறேன். கவலை வேண்டாம்!

அவ்வாறே அசுரலோகம் சென்று, அசுரகுருவான சுக்ராசாரியரைப் பணிந்து நின்றான் கசன்.

பெருமானே! அங்கிரஸ ரிஷியின் பேரன் நான். பிருகஸ்பதியின் குமாரன். என் பெயர் கசன். என்னைச் சிஷ்யனாக ஏற்று அருள வேண்டும். தங்களுக்குப் பணிவிடை செய்யும் பாக்கியம் கிடைக்க வேண்டும்.

அப்பனே! தகுந்த சீடன் வந்தால் குரு மறுக்கக்கூடாது. நீ நல்ல குலத்தவன். உன்னை ஏற்றுக்-கொள்கிறேன்.

சுக்ராசாரியர் தம் மகள் தேவயானி-மீது உயிரையே வைத்திருந்தார். அவருடைய அன்பைப் பரிபூர்ணமாகப் பெற வேண்டுமானால் தேவயானியின் அன்புக்குப் பாத்திரமாக வேண்டும். அதனால் அவள் இட்ட ஏவலனைச் செய்தும் ஆடியும் பாடியும் அவளுடைய பிரியத்தைக் கசன் சம்பாதித்து வந்தான். கசனிடம் தேவயானிக்குப் பிரியம் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது.

ஆகா அற்புதம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தேவலோகத்துக் கசன் சீடனாக வந்திருப்பது அசுரர்களுக்குப் பிடிக்கவில்லை. சஞ்சீவினி மந்திரத்தைக் கற்றுக்கொண்டு போவதற்கே கசன் வந்திருப்பதாக அவர்கள் நினைத்தார்கள். ஒரு நாள் கசன் குருவின் பசுக்களை மேய்க்கப் போனபோது அவர்கள் அவனைப் பிடித்து, துண்டு துண்டாக வெட்டி, நாய்களுக்கு இரையாகப் போட்டுவிட்டார்கள்.



தேவயானிக்கு ஏதோ சந்தேகம் வரவே, அவள் கலங்கிய கண்களுடன் தந்தையிடம் வந்தாள்.



சஞ்சீவினி மந்திரத்தைப் பிரயோகித்து, அசுரகுரு கசனை வா என்று அழைத்ததும், நாய்களின் உடலைப் பிளந்துகொண்டு கசன் வெளிவந்துவிடுகிறான்.

மற்றொரு நாள் கசன் தேவயானிக்காகப் பூப்பறிக்கப் போனான். அசுரர்கள் அவனை அங்கே பிடித்துக் கொன்றுவிட்டார்கள். அவன் உடலைக் கூழாக்கிக் கடலில் கரைத்துவிட்டார்கள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வெகு நேரமாகியும் கசன் திரும்பி வராததைக் கண்டு தேவயானிக்கு அழுகை வந்தது. அப்பாவிடம் போய்ச் சொன்னாள்.

மூன்றாம் முறையாக அசுரர்கள் கசனைப் பிடித்துக்கொன்று, சுட்டுப் பொடியாக்கி, அந்தப் பொடியைக் குருதேவரின் பானத்தில் கரைத்துக் கொடுத்தார்கள்.

கடல் பொங்கியபின், அசுரர்களிலிருந்து கசன் மீண்டு வந்தான்.



இப்போதும் தேவயானி தந்தையிடம் ஓடி வந்து, கசனைக் காணவில்லை என்றாள். சுக்ராசாரியர் ஞானதிருஷ்டியால் பார்க்க, உண்மை விளங்கியது. கசன் பரமமாக அவருடைய வயற்றில் இருப்பது தெரியவே....



Sri Vidyabharathi Book Centre, Sringeri
CC-O. In Public Domain. Digitized by eGangotri

குருதேவரின் உடல் கீழே கிடக்க, கசன் சஞ்சீவினியை ஒதி, அவரைப் பிழைத்து எழச் செய்கிறான்.



கசா! கெடுவான் கேடு நினைப்பான்! சஞ்சீவினி மந்திரத்தை நான் கற்றுத் தந்துவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் கிறும்பக் கிறும்ப உன்னைக் கொன்றார்கள். கடைசியில் அதனாலேயே நீ சஞ்சீவினி வித்தையைக் கற்றுக்கொள்ள நேர்ந்துவிட்டது. இதுதான் தெய்வ சித்தம். ஆகவே நீ வந்த நோக்கம் பூர்த்தியாகிவிட்டது. நீ இனித்திரும்பி உன் இருப்பிடம் செல்லலாம்.

ஏன்னை ஆசீர்வதியுங்கள்



தேவயானியிடம் கசன் விடை பெறும்போது.....

கசன் சஞ்சீவினி வித்தையுடனும் மகிழ்ச்சியுடனும் தேவலோகம் திரும்பிச் செல்கிறான்.



Sri Vidyabharathi Book Centre, Sringeri
CC-O. In Public Domain. Digitized by eGangotri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ததீசி முனிவரின் தியாகம்

கருத்து: சரஸ்வதி * கதை: ஆர்வி

அஸ்வினி குமாரர்கள் இறந்தவர்களைக் கூட பிழைக்க வைக்கும் திறன் படைத்த மருத்துவர்கள். அவர்கள் பிரம்ம வித்தை யைக் கற்க விரும்பினர்கள். இந்திரனுக்கு இது பிடிக்கவில்லை. பிரம்ம வித்தை அவர்களுக்குத் தெரிந்தால் தன் பதவிக்கு ஆபத்து என்று அவன் நினைத்தான். அத னால் அவர்களுக்கு யாரும் பிரம்ம வித்தை யைக் கற்றுத்தரக் கூடாது என்று ஆணை யிட்டிருந்தான். மீறினால் வஜ்ராயுதத்தி னால் கற்றுக் கொடுப்பவரின் தலை வெட்டப் பட்டு விடும். இதை அறிந்த — அஸ்வினி குமாரர்கள்....

படம் ரமணி..

ததீசி முனிவரிடம் வந்து.....

சுவாமி! தாங்கள் தாமே அருள் புரிய வேண்டும். எங்களுக்குப் பிரம்ம வித்தையைக் கற்பிக்க வேண்டும். இந்திரன் ஆணைக்குப் பயந்து எல்லாரும் மறுக்கிறார்கள்.

அப்படியா? கல்வியை வேண்டி நின்றால், பயமோ பேராசையோ இல்லாமல் கற்றுத் தருவது தான் தர்மம். ஆகவே, உங்கள் விருப்பப் படியே ஆகட்டும்.

இந்திரன் ஆணையிலிருந்து மீள ஒரு வழி இருக்கிறது. ஆனால் அப்படிச் செய்யத் தயக்கமாய் இருக்கிறது.

எது வாயினும் தயங்க வேண்டாம்! உங்கள் விருப்பம் போல் செய்யுங்கள்.

ததீசி முனிவர் மனமுவந்து அனுமதி வழங்கியதால் அவரது தலையை வெட்டி, மருந்திட்டு, தனியே வைத்து விட்டு, ஒரு குதிரையின் தலையைக் கொண்டு வந்து அவரது உடலில் பொருத்தினர்கள். குதிரைத் தலையுடன் முனிவர் பிரம்ம வித்தையை அஸ்வினி குமாரர்களுக்கு உபதேசித்தார்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இதையறிந்த இந்திரனுக்கு மகா-கோபம். வஜ்ராயுதத்தை ஏவினான்.

அஸ்வினி குமாரர்கள் மறுகணம்...

சுவாமி! மன்னித்தருள வேண்டும். எங்களுக்கு விடை தர வேண்டும்.

நல்லது, போய்வாருங்கள்!

சில நாட்களில் உண்மையிலேயே இந்திர பதவிக்கு ஆபத்து வந்து விட்டது. அருகன் ஒருவன் யாகம் செய்தபோது— அக்கினிகுண்டத்திலிருந்து விருத்திராசுரன் என்ற அசுரன் தோன்றினான்.

நீ, போய் இந்திரனை விரட்டி விட்டு, தேவலோகத்தைப் பிடித்துக் கொள்!

தேவர்கள் எதிர்த்தார்கள். அவர்கள் ஏவிய ஆயுதங்களையெல்லாம்— விருத்திராசுரன் விழுங்கிக் கொண்டிருந்தான்.

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இந்திரன் செய்வதறியாது பிரம்மாவிடம் ஆலோசனை.

ஐயனே! காப்பாற்றுங்கள்!

பிரம்மா பகவானைத் துதித்தார்: பிறகு—

ததீசி முனிவரின் எலும்பு களைக் கொண்டு வந்து, ஆயுதமாக உபயோகித்தால் அசுரனைக் கொல்லலாம்!

இந்திரன் கதீசி முனிவரிடம் வந்தான். அவரைப் பலவாறாகத் துதித்தான்.

சுவாமி! என் பிழை பொறுத்து, எனக்கு உதவ வேண்டும்.

அண்டினவர் பகையையானாலும் உதவுவது நம் கடன். அப்படியே ஆகட்டும்.

சுவாமி! ஆயுதங்கள் செய்யத் தங்களுடைய எலும்புகள் வேண்டும். வேறு வழியால் அசுரனைக் கொல்ல முடியாதா?

இவன் புகலையைக் காப்பாற்றிக் கொள்ள என் உடலைக் கேட்கிறான். ஆனால் என்னால் என்றாவது ஒருநாள் அழியப்போகும் இந்த உடல் யாருக்காவது பயன்படுமானால் வேறு என்ன வேண்டும்!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

கோகுலத்தில் ஒரு நாள்...

பாகவதக் கதை : ஆர்வி

படம் : சங்கர்...

மதுமங்களன், சாண்டில்ய மகரிஷியின் பையன். கண்ணனின் அன்னை யசோதை அந்த ரிஷியின் அனுமதி பெற்று மதுமங்களனுக்குத் தன் வீட்டிலேயே அன்னமிட்டு வந்தாள். ஒரு நாள் நண்பர்கள் எல்லாரும் நதிக்கரையில் அன்னம் புசிக்க அமர்ந்தபோது...

கோகுலத்தில் கண்ணன் புரிந்த லீலைகள் எத்தனையோ! யமுனை நதிக்கரையில், மர நிழலில் நண்பர்கள் புடைசூழ அமர்ந்து, வேடிக்கையும் விளையாட்டுமாய் ஆடிப் பாடுவான். நண்பர்கள் தங்கள் தங்கள் வீடுகளிலிருந்து கொண்டுவரும் கின்பண்டங்களையெல்லாம் எல்லாருக்கும் பகிர்ந்து அளித்துவிட்டுத் தானும உண்பான்.

மது! எல்லாரும் அவரவர் வீட்டிலிருந்து எனக்கு ஏதாவது உண்ணக் கொண்டு வருகிறார்கள். நீ ஒரு கரமும் மேன்றும் கொண்டு வரவில்லையே. இன்று எனக்கு உன் வீட்டிலிருந்து சாப்பிட ஏதாவது கொண்டு வந்தால்தான் ஆகிற்று. இல்லாவிட்டால் உன்னை விடமாட்டேன்!

மது வீட்டுக்கு ஓடி, கண்ணனுக்கு ஏதாவது சாப்பிடக் கொடுக்கும்படித் தன் தாய் பூர்ணமாளியிடம் போய்க் கேட்டான்.

CC-O. In Public Domain. Digitized by eGangotri
Sri Vijayanarayani Book Centre, Sringeri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கண்ணனிடம் இதை மறைக்க முடியுமா? அவன் மோரைக் குடிப்பதைக் கண்ணன் எப்படியோ பார்த்துவிட்டான்.

கண்ணன் ஓடி வருவதற்குள் மது அந்த மோர் அத்தனையையும் குடித்துவிட்டான். கடைவாயிலிருந்து மோர் வழிந்து கொண்டிருந்தது.



இந்தக் காட்சியைக் கண்ட வானவர்கள் கண்ணன் மீது மலர்மாரி பொழிந்தார்கள். பிரம்மதேவர் இடையில் தோன்றி...

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Bharathi Book Centre, Sivagiri

காஷ்மீர் சால்வை

கருத்து : டாக்டர் சிவராம்

கதை அமைப்பு : பரமஹம்சதாஸ் படம் : சங்கர்...



விஜயரங்க சொக்கலிங்க மன்னர் திருச்சியை ஆண்ட காலம். அவர் ஒரு சமயம் பரிவாரங்களுடன் திருச்சி மலைக்கோட்டை சென்று உச்சியில் கோயில் கொண்டிருக்கும் விநாயகப் பெருமானையும் மலையடிவாரத்தில் குடிகொண்டிருக்கும் அம்பாளையும் தரிசித்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார்.

பாறையின் அருகே தீவ்வியமான தேஜஸுடன் காயுமான சுவாமிகள் தியானம் செய்து கொண்டிருப்பதைக் கண்டதும் பல்லக்கை விட்டு மன்னர் இறங்கினார்.

சிறிது நேரம் சென்றபின் சுவாமிகள் கண் விழித்தார். மன்னர் அவரைப் பணிந்து நின்றார்.



சில்லெனக் குளிர் காற்று அடித்துக் கொண்டிருந்தது.

CC-0. In Public Domain. Digitized by eGangotri
Sri Vidyabharathi Book Centre, Sringeri

மறுகணமே அமைச்சர் ஆட்களை அனுப்பி மிகச் சிறந்த வேலைப்பாடுகள் கொண்ட சால்வை ஒன்றை வரவழைத்தார்.

அரசர் பெருமானே! அற்புதமான காஷ்மீரத்துச் சால்வை இது! மிகவும் அருமையானது.

அப்படியா, மெத்த மகிழ்ச்சி!

மன்னர் அந்தச் சால்வையைப் பணிவோடு சுவாமிகளிடம் எடுத்துச் சென்றார்.

சுவாமி! குளிர் நடுக்குகிறது. இந்தச் சால்வையை என் கையாலேயே தங்கள் திருமேனியில் போர்த்த விரும்புகிறேன். எனக்கு அந்தப் பாக்கியத்தை அருள வேண்டுகிறேன்.

மன்னா! உன் விருப்பப்படியே ஆகட்டும்.

சுவாமிகளுக்கு அந்தப் பொற்சரிகைச் சால்வையை அணிவித்து மகிழ்ந்த மன்னர் தம் பரிவாரங்களோடு புறப்பட்டுச் சென்றார்.

சற்றுப் பொறுத்து.....

தாயுமான சுவாமிகள் அரசர் போர்த்திய பொன்னுடையுடன் தெருவில் இறங்கி நடக்க, எதிரே ஓர் ஏழைச் சிறுமி குளிரில் நடுங்கிக் கொண்டு நிற்பதைப் பார்த்தார்.

குழந்தாய்! இப்படி அருகில் வா!

சுவாமிகளே! அந்தச் சிறுமியைத் தீண்டாதீர்கள். அவள் அரிஜனச் சிறுமி!

தெருவில் இருந்த மற்றொருவர்

ஏ பெண்ணே! என்ன திமிர் உனக்கு! அவர் தெரியாமல் கூப்பிட்டால் நீ போய்விடுவதா!

தாயுமான சுவாமிகள் அந்தச் சிறுமியை அருகில் அழைத்து, மன்னர் அளித்த சால்வையை எடுத்து அவளுக்குப் போர்த்திவிட்டார். வணங்கினர்.

போய் வா, காளியே!

கூட்டத்திலிருந்த ஒற்றன் அரசரிடம் இந்தச் செய்தியைக் கூற ஓடினான்.

பெருமானே! மலைக்கோட்டை அருகே அவமானகரமான செய்தி நடந்துவிட்டது. தாயுமான சுவாமிகளுக்குத் தாங்கள் கொடுத்த சால்வையை அவர் அரிஜனச் சிறுமிக்குத் தந்துவிட்டார். ஊரே பரபரக்கிறது.

CC-0. In Public Domain. Digitized by eGangotri

Courtesy: Vanathi Pathippagam, Chennai. Sivakumar Bharathi Book Centre, Srirangam



Sri Vidyabharathi Book Centre, Sringeri
CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிந்தாத பால் கிண்ணம்

கருத்து: சுவாமி விவேகானந்தர் கதை: பரமஹம்சதாஸ்

படம் : சங்கர்...

வியாச முனிவரின் மகன் சுகதேவர். அவர் பிறக்கும்போதே நிறைநிலை எய்திய ஞானியாகப் பிறந்தவர். சுகதேவருக்கு வியாசர் தமக்குத் தெரிந்த ஞானத்தையெல்லாம் கற்பித்தபின் –



ஜனகரை 'விதேகர்' என்று அழைப்பார்கள். 'விதேகர்' என்பதற்கு 'உடம்பில்லாமல் இருப்பவர்' என்று பொருள். அதாவது, உடம்பின் நினைவே இல்லாமல் வாழ்பவர். அரசராக இருந்து பெருங்காரியங்கள் செய்துகொண்டிருந்தாலும் தான் உடலல்ல என்ற ஞானத்திலிருந்து விலகாதிருப்பவர். சுகதேவர் தம்மிடம் வரப்போவதை ஞானதிருஷ்டியால் ஜனகர் அறிந்ததும் –

CC-O. In Public Domain. Digitized by eGangotri

குறிப்பிட்ட தினம் மகான் சுகதேவர் ஜனகரின் அரண்மனைக்கு வந்தார். நாடு போற்றும் ஞானியான அவரை யாரும் அங்கே வரவேற்கவில்லை. மூன்று நாட்களாயின. மூன்று நாட்களும் சுகதேவர் அரண்மனை வாயிலில் தாம் உட்கார்ந்த இடத்திலேயே அமைதியாக உட்கார்ந்திருந்தார்.

நான்காவது நாள் – ஜனக மகாராஜா தமது மந்திரி பிரதானிகள் புடைசூழ, சகல மரியாதைகளுடன் சுகதேவரை வரவேற்க வந்தார்.

சுகதேவரை அழைத்துச் சென்று வாசனைநீரில் குளிப்பாட்டினார்கள். அற்புத ஆடைகள் அணிவித்தனர். சுவையான உணவு தந்தார்கள். இப்படி எட்டு நாட்கள் ராஜோபசாரம் நடந்தது. ஆனால் அது காரணமாகச் சுகதேவர் முகத்தில் எந்த மாறுதலும் தோன்றவில்லை.

ஒன்பதாவது நாள் அரசசபைக்குச் சுகதேவர் அழைத்துச் செல்லப்பட்டார். இனிய வாக்கிய தோஷங்களுடன் அரண்மனையில் அரசருக்கு முன் அழகிய பெண்களின் நடனம் நடந்துகொண்டிருந்தது. அதைத் தவிர இன்னும் பல கேளிக்கைகள்.

சுகதேவரே, வருக!

Sri Vidyabharati Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வரவேற்ற அரசர் சுகதேவரிடம் பால் நிரம்பிய கிண்ணத்தைக் கொடுத்தார். அதில் விளிம்புவரை பால் தளும்பி நின்றது.

சுகதேவர் சிறுவராக இருந்தாலும் நிறைந்த ஞானி. அவராக அனுமதித்தாலன்றி அவர் மனதுக்குள் எந்த உலக நிகழ்ச்சியும் நுழைய முடியாது. ஆகவே அந்தப் பரபரப்பான அரசசபையின் நிகழ்ச்சிகள் அவரைப் பாதிக்கவில்லை. அமைதியாகப் பால் சிந்தாமல் ஏழு முறை அவர் சபையைச் சுற்றி வந்தார்.

ஏழு முறை சுற்றிக் களியும் பால் சிந்தாமல் கிண்ணத்தைச் சுகதேவர் ஜனகரிடம் ஒப்படைத்தார்.

மனக்கட்டுப்பாடு உடைய சுகதேவரைப் போன்ற நிறைஞானிகளுக்கு யாரும் போதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதை இதிலிருந்து நாம் தெரிந்துகொள்கிறோம் அல்லவா?

CC-0. In Public Domain. Digitized by eGangotri
Sri Vidyaranya Sanskrit Research Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அம்பரீஷ மகாராஜா

கதை: மங்களம் ஆத்ரேயி

படம்: ஸதா...

சிறுவர் பகுதி

அம்பரீஷ மகாராஜா முதல் நாள் விரதம் இருந்துவிட்டு மறுநாள் பாரணை செய்ய அமர்ந்தார். அப்போது துர்வாசர் தோன்றினார்.



மன்னன் வேண்டுகோளை துர்வாச முனிவர் ஏற்றுக் கொண்டார்.



துர்வாசர் வெகுநேரம் திரும்பாததால் பாரணை செய்ய வேண்டிய நேரம் தவறிவிடுமோ என அஞ்சிய மன்னர், அரண்மனை புரோகிதரின் சம்மதம் பெற்று துளசியையும், கங்கா ஜலத்தையும் உட்கொண்டார்.

சிறிது நேரத்தில் துர்வாசர் யமுனையிலிருந்து திரும்பினர். அரசன் தனக்காகக் காத்திராமல் பாரணையை முடித்துவிட்டதை அறிந்து கடுங்கோபம் கொண்டார்.

தவ வலிமையால் துர்வாசர் ஒரு பூதத்தை உண்டாக்கினர்.

அம்பரீஷனே விரும்பியிருந்தால் அந்த பூதத்தை அழித்திருக்க முடியும், அல்லது துர்வாசருக்குப் பதில் சாபம் கொடுத்திருக்க முடியும். ஆனால் அப்படிச் செய்யவில்லை. கடவுளே கதியென நம்பியிருந்தார்.

CC-0. In Public Domain. Digitized by eGangotri

திருமாலின் சுதர்சனசக்கரம் அங்கு தோன்றி பூதத்தை எரித்தது. துர்வாசரையும் துரத்த ஆரம்பித்தது.

துர்வாசர் பயந்து இந்திர லோகம், சிவ லோகம், பிரம்ம லோகம் ஆகிய இடங்களுக்குச் சென்று தன்னைக் காப்பாற்ற வேண்டினார்.

எங்களால் உன்னைக் காப்பாற்ற இயலாது!

கடைசியில் துர்வாசர் வைகுண்டத்திலிருந்த விஷ்ணுவை சரண் அடைந்தார்.

முனிவரே, அம்பரீஷனைக் காப்பதற்காகத் தோன்றிய இந்தச்சக்கரத்திடமிருந்து உம்மை மீட்க எனாலும் முடியாது. நான் பக்தர்களுக்கு அடிமை!

நானும் உங்கள் பக்தன் தானே? எனக்கும், அம்பரீஷனுக்கும் இடையில் இப்படி வித்தியாசம் காட்டலாமா?

பகவானே என்னைக் காப்பாற்றுங்கள். சுதர்சன சக்கரம் என்னைக் கொல்ல வருகிறது.

CC-O. In Public Domain. Digitized by eGangotri



CC-O. In Public Domain. Digitized by eGangotri







21 ஆம் பக்கத் தொடர்ச்சி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



KATHIMALAR (TAMIL)

Rs. 4.00

Sri Vidyabharati Book Centre, Sringeri